முருகப்பெருமான் துணை

# மகான் சக்தி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.10.2023, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக ஞான குருவே
அண்ணலே ஞான தேசிகனே
ஏறுமுகம் உலகம் அடைந்த
ஏகாந்த சரவண சோதி ஏற்றி
2. ஏற்றி ஞானம் அருளுகின்ற
இணையிலா ஞான வள்ளலே
ஆற்றல் மிக்க உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே முப்பான்திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 30 ம் நாள், 17.10.2023, செவ்வாய்கிழமை)
தேசிகன் கேட்க அறிவுரை ஆசி
ஓங்கார உலகம் அமைய வேண்டி
ஓதிடுவேன் சக்தி நாயனார் யானும்
4. யானுரைக்க உலகம் எங்கிலும்
உயர்ஞானம் தேடி அலைகின்ற
ஞானபலமிலா மக்களெல்லாம்
நம்பி அரங்கமகான் பாதம் பற்றிவர
5. பற்றிவர உலகப் பற்று விலகி
பரிபக்குவ நிலைகள் கூடி
மாற்றமாக அரங்கன் தரும்
மகாமந்திர தீட்சை பலம் சேர்க்கும்
6. சேர்க்குமே ஞானப்பிறவியாக்கி
சேவை கொண்டே அடையும்
நேர்த்தியான வழிகள் தேறி
நிலமதனில் தருமம் காக்கும் வண்ணம்

7. வண்ணமுடன் செயல் எண்ணம்
வடிவாகி இயக்கம் கூடி
மண்ணுலக மாற்றம் செய்ய
மகத்துவம் பல அடைந்திடுவர்

8. அடையவே மன அமைதிபலம்
ஆணவமலம் அகன்றோடி
தடையற எல்லோர்க்கும் பிடிக்கும்
தரும தயவானவனாக மாறி

9. மாறியே உலகினில் மாற்றம்
மார்க்கமுடன் அரங்கன் ஆசிபட
கூறிட தொண்டர்களால் நடக்கும்
குருவருள் குருபரன் அருளாக மாறி

10. மாறியே உலகினில் அற்புதம்
மக்கள் மகிழவே நடக்கும்
தேறியே அரங்கனை தேடி
தொண்டர்படை அளவிலாப் பெருகி

11. பெருகியே ஞான வாழ்வும்
பேரானந்த ஞானகதியும்
முருகப்பெருமான் காட்சியும்
முழுமையும் அரங்கனால் கிட்டும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–